# நோவா பேழைகட்டுகிறார்

*உன் பெற்றோர் உன்னை ஒரு வேலையைச் செய்யச் சொன்னால், 'ஏன்? எதற்கு?' என்று கேள்விகளைக் கேட்பாயா? இல்லை. நீ உன் அப்பா, அம்மாவை நேசிப்பதால் உடனே செய்வாய் அல்லவா? நோவாவும் தேவனை நேசித்ததால், தேவன் சொன்னபடியே பேழையைக் கட்டினார்.*

உலகம் இன்னும் புதிதாகவே இருந்தது. உலகத்தில் பத்து தலைமுறை மக்கள்தாம் இருந்தனர். ஆயினும் தேவனை விட்டு விலகி, மிகவும் மோசமான ஒரு வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தேவனை மறந்து கேவலமாக வாழ்ந்தார்கள். எனவே, வெள்ளத்தினால் அந்த உலகத்தை அழிக்கத் தீர்மானித்தார் தேவன். புதிதாக மீண்டும் ஓர் உலகத்தை உருவாக்க விரும்பினார். அப்போது இந்த உலகத்தில் நோவா என்பவரும் அவர் மனைவியும் அவருடைய மூன்று மகன்களும் அந்த



மகன்களின் மனைவிகளும் மட்டுமே தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தார்கள்.

தேவன் தமது திட்டத்தை நோவாவிடம் சொன்னார். அழியப்போகும் அந்த உலகிலிருந்து தேவன் நோவாவின் குடும்பத்தைக் காப்பாற்ற விரும்பினார். தாம் படைத்த விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மீன்கள் மற்றும் ஊரும் பிராணிகளையும் காப்பாற்ற விரும்பினார். நோவாவின் குடும்பமும், நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன யாவும் அவற்றிற்குத் தேவையான உணவுப் பொருட்களும் தண்ணீரும் வைக்கப்படத்தக்கதாக பெரிய ஒரு பேழையை உண்டாக்கும்படியாக தேவன் நோவாவிடம் கூறினார். ஆதலால் நோவா கட்டயிருந்தப் பேழையின் நீளம், அகலம், உயரம், அது எப்படிக் கட்டப்பட வேண்டும் என்பதையும் தேவன் தாமே நோவாவிடம் சொன்னார். தேவனுக்குக் கீழ்ப்படிந்து மிகவும் கவனமாகக் கட்ட

## மனன வசனம்

**உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்.**

**சங்கீதம் 143:10.**

நோவா சம்மதித்தார்.

பேழை கட்டும் வேலையானது அதிகப் பொறுப்பான ஒரு வேலைதான்; தனது குடும்பத்தையும் நன்கு கவனித்துக் கொண்டு, தேவன் தமக்குக் கட்டளையிட்ட வேலையைச் செய்ய நோவா ஆயத்தமாக இருந்தார்.

நோவாவின் மிகப்பெரிய மூத்த தாத்தா பெயர் ஏனோக்கு. இவர் மிகவும் தேவ பக்தியான மனிதர். தேவனோடு பேசிக் கொண்டே இருப்பது இவருக்கு மிகவும் பிடிக்கும். தேவனுக்கும் ஏனோக்கை மிகவும் பிடித்து இருந்தது. ஏனோக்கு இறப்பதற்கு முன்னராகவே தேவன் அவரைப் பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார்.

வெள்ளம்பற்றி நோவாவிடம் தேவன் கொடுத்த அந்த எச்சரிப்பை அவர் ஏனோக்கிடமும் சொல்லியிருந்தார். ஏனோக்கும் அந்த மக்களுக்குத் தேவ எச்சரிப்பைக் கொடுத்து அவர்களைத் தேவனிடம் அழைத்தார். ஏனோக்கின் மகனான மெத்தூசலா என்னும் தேவ மனிதரும் மக்களை எச்சரித்தும் மக்கள் மனம்மாறவில்லை. மெத்தூசலாவின் பேரன் நோவாவின்மூலம் மீண்டும் தேவன் எச்சரிப்பு கொடுத்தார்.

சேம், காம், யாப்பேத் என்னும் நோவாவுடைய மூன்று பிள்ளைகளும் பேழையைக் கட்டும் வேலையில் (நோவாவுக்கு) உதவியாக இருந்தனர். அந்தப் பேழையின் உள்ளே செல்லும் யாவரும் தேவனால் பாதுகாக்கப்பட தேவன் மீண்டும் ஒரு வாய்ப்பைத் தந்தார். நல்லவர் கெட்டவர் யாவரும் பேழையின் உள்ளே போகலாம். ஆனால், நோவா சொன்னதைக் கேட்டவர்கள் அவரைக் கேலி செய்தார்கள். தேவனின் வார்த்தைகளை அலட்சியப்படுத்தினர்.

120 வருடங்களாக மக்களுக்குத் தேவனின் எச்சரிப்பை நோவாவின் குடும்பத்தார் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும், அவர்களின் எச்சரிப்பிற்கு எவரும் செவி



## செய்தி

***தேவனுடைய குடும்பத்தின் பிள்ளைகள் தேவனுடைய சித்தப்படி செய்வார்கள்.***

கொடுக்கவில்லை. நோவா குடும்பத்தினரின்மூலம் அவர்களுக்கு தேவன் தந்த எச்சரிப்பு கேலிக்கூத்தாகத் தெரிந்தது. பேழையைக் கட்டிமுடிக்க 120 வருடங்களாயின. தேவனின் திட்டப்படியே தேவனின் உதவியுடன் பேழையைக் கட்டி முடித்தனர். பேழையினுள் மனிதருக்கும் உயிர்ப்பிராணிகளுக்கும் தேவையான யாவும் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது.

நாம் சொல்வதைத் தேவன் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தேவன் சொல்வதைச் செய்யவே, நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

அன்பே, தம்முடன் சேர்ந்து வேலைசெய்கிற பிள்ளைகள் தேவனுக்கு இன்றும் தேவையாக உள்ளனர். தேவனுடைய பிள்ளைகள் ஒரு குழுவாகச் சேர்ந்து செயல்படுவார்கள். நீ அப்படிச் செயல்படுவாயா?

### செய்முறை

*நாம் தேவனுடைய பிரமாணங்களின்படி செய்ய தேவன் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று எழுது. விடையைக் கண்டறிய கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களையும் படங்களையும் பயன்படுத்து; இன்றைய மனன வசனத்தையும் பார்.*

